பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 07 2025 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஐந்து நாடுகள் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டாம் கட்டமாக இன்றிரவு ட்ரினிடாட் டொபாகோ சென்றடைகிறார்.
- இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவு பாகிஸ்தானால் பாதிக்கப்படாது என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தலைவர்களின் முதலாவது தேசிய மாநாட்டை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா ஹரியானாவில் இன்று தொடங்கி வைக்கிறார்.
- அமர்நாத் புனித யாத்திரை கஷ்மீரின் பஹல்காம் மற்றும் பல்தால் பகுதிகளில் இருந்து இன்று தொடங்குகிறது.
- அஸ்தானாவில் நடைபெற்று வரும் உலக குத்துச்சண்டைப் போட்டியின்இந்தியாவின் மீனாட்சி, பூஜா ராணி ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

ஐந்து நாடுகள் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டாம் கட்டமாக இன்றிரவு ட்ரினிடாட் டொபாகோ சென்றடைகிறார்.

அங்கு அவர் அந்நாட்டு அதிபர் திருமதி Christine Carla Kangaloo மற்றும் பிரதமர் திருமதி Kamla Persad Bissessar ஆகியோருடன் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

இந்தியா – ட்ரினாட் டொபாகோ இடையே உணவு பதப்படுத்துதல், வர்த்தகம்., சுகாதாரம், கடல்சார் பாதுகாப்பு, போக்குவரத்து, பொருளாதாரம் மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் விவாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அந்நாட்டு நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்திலும் இந்திய வம்சாவளியினர் இடையேயும் பிரதமர் உரையாற்ற உள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<>>>>

இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவு பாகிஸ்தானால் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாது என்று வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா – அமெரிக்கா இடையேயான உறவுகள் பரஸ்பர நலன் அடிப்படையில் அமைந்துள்ளதாகவும், இதில் எந்த நாடும் தலையிட முடியாது என்றும் கூறியுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைகக்கு பிறகு இந்தியா – பாகிஸ்தான் இடையேயான மோதலை முடிவுக்குக் கொண்டுவர தாம் தலையிட்டதாக கூறிவரும் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்பின் கருத்தை அவர் நிராகரித்தார்.

இந்தியா — பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகளிடையே நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதன் அடிப்படையில் இரு நாடுகளுக்கு இடையே சண்டைநிறுத்தம் ஏற்பட்டதாக திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<>>>>

மாலி தீவின் Kayes என்ற இடத்தில் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வந்த 3 இந்தியர்கள் கடத்தப்பட்டது குறித்து வெளியுறவு அமைச்சகம் கவலை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் தொழிற்சாலைக்குள் நுழைந்த ஆயுதமேந்திய குழு ஒன்று தாக்குதல் நடத்தி பிணைக் கைதிகளாக அவர்களை பிடித்து சென்றுள்ளனர்.

இந்நிலையில் அவர்களை மீட்பது தொடர்பாக மாலி தீவு அரசுடன் தொடர்புகொண்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

அத்துடன் அங்குள்ள இந்திய தூதரகம், கடத்தப்பட்ட இந்தியர்களின் குடும்பத்தினருடன் தொடர்புகொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

மாலி தீவில் வசிக்கும் அனைத்து இந்தியர்களும் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், தேவையான உதவிகளுக்கு இந்திய தூதரகத்தை அணுகுமாறும் வெளியுறவு அமைச்சகம் கேட்டுக்கொண்ள்ளது.

<<<<>>>>

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் இம்மாதம் 21ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை நடைபெறும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரை நடத்துவதற்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திர தினக் கொண்டாட்டங்களை ஒட்டி அடுத்த மாதம் 13 மற்றும் 14ஆம் தேதிகளில் அவை நடைபெறாது என்றும் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமர்நாத் புனித யாத்திரை இன்று தொடங்குகிறது.

38 நாட்கள் நடைபெறும் இந்த யாத்திரை தெற்கு கஷ்மீரின் பஹல்காம் பகுதியில் இருந்தும், மத்திய கஷ்மீரின் பல்தால் பகுதியில் இருந்தும் தொடங்குகிறது.

இதையொட்டி அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தலைவர்களின் முதலாவது தேசிய மாநாடு ஹரியானாவின் குருகிராமில் உள்ள மனேசரில் இன்று தொடங்குகிறது.

மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா இதனைத் தொடங்கி வைக்கிறார்.

நாட்டில் விரைவாக நகரமயமாக்கப்பட்டு வரும் நிலையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய பங்களிப்பை எடுத்துரைக்கும் வகையில் இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளுதல், நகர்ப்புற நிர்வாகத்திற்கான புதுமையான அணுகுமுறைகளை ஆராய்தல் ஆகியவற்றை இம்மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

அரசியலமைப்பு ஜனநாயகம் மற்றும் நாட்டின் கட்டமைப்பை வலுப்படுத்துவதில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு என்ற தலைப்பில் இம்மாநாடு நடைபெறுகிறது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் கிஸ்துவார் மாவட்டத்தில் வனப் பகுதியில் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து, பாதுகாப்புப் படையினர் நேற்று மாலை முதல் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சத்ரு பகுதியின் அருகே பாதுகாப்புப் படையினர் நேற்று தேர்தல் பணியில் ஈடுபட்ட போது தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், அதற்கு பதிலடியாக பாதுகாப்புப் படையினர் தாக்குதலில் ஈடுபட்டதகாகவும் கூறப்படுகிறது.

<<<>>>

தமிழகத்தில் பிரதமரின் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் வேலூர் மாவட்டத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் மூலம் தாம் பெரும் பயனடைந்ததாக வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Voice Byte – 33 sec)

<<<>>>

அருணாச்சலப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தானின் கிழக்குப் பகுதி, குஜராத், ஹிமாச்சலப்பிரதேசம், கோவா, மகாராஷ்டிராவின் மத்தியப் பகுதி உள்ளிட்ட மாநிலங்களின் குறிப்பிட்ட பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா மாநிலங்களின் சில பகுதிகளிலும் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று கூறியுள்ளது.

நாட்டின் வடகிழக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளில் அடுத்த 6 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்றும் கூறியுள்ளது.

கேரளா, கர்நாடகா, தெலங்கானா மாநிலங்களிலும் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<>>>

புதிய குற்றவியல் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்றதையொட்டி, புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் கண்காட்சி நடைபெறுகிறது.

நேற்று தொடங்கிய இந்த கண்காட்சி வரும் 6ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

தில்லி அரசு ஏற்பாடு செய்துள்ள இந்தக் கண்காட்சியில் புதிய குற்றவியல் சட்டங்களின் விதிகள் மற்றும் மாற்றங்கள் குறித்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

அஸ்தானாவில் நடைபெற்று வரும் உலக குத்துச்சண்டைப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் மீனாட்சி, பூஜா ராணி ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இதன் மூலம் இந்தியாவிற்கு 2 பதக்கங்கள் உறுதியாகியுள்ளது.

--------------

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யூகி பாம்ரி – அமெரிக்காவின் Golloway இணை இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ரித்விக் போலிபல்லி – கொலம்பியாவின் நிக்கோலஸ் இணையும் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---------------

இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா தமது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்புக்கு 310 ரன் எடுத்தது.

பர்மிங்ஹாமில் நடைபெற்ற இப்போட்டியில் கேப்டன் சுப்மன் கில் 114 ரன்னுடனும், ரவீந்திர ஜடேஜா 41 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

-------------

இங்கிலாந்துக்கு எதிரான 3வது இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நார்தாம்டனில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 268 ரன் எடுத்தது.

269 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 34 புள்ளி 3 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 274 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக வைபவ் சூர்யவன்ஷி, 31 பந்துகளில் 86 ரன் எடுத்தார்.

---------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் எலிமினேட்டர் சுற்றில் திண்டுக்கல் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்று இரண்டாவது தகுதிச் சுற்றுக்கு முன்னேறியது.

கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியின் இந்தியாவின் எஸ்.எம். சுப்ரமணியன், கிடாம்பி ஸ்ரீகாந்தும், ஷ்ரேயான்ஷி வலிஷெட்டியும் காலிறுதிக்கு முந்தயை சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<The End>>>>